Vol.21 | No. 11 | November 2017

The Official Organ of the Diocese of Thuckalay



# இறையருள்



15.10.2017



29.10.2017

## MISSION LEAGUE RALLY & ROSARY PROCESSION

Celebration of FAITH
In the Footsteps of Mother Mary &
St.Thérèse of Lisieux



Consecration of Renovated Church - Kaliyal
08.10.2017



Pastoral Council & Releasing of Diocesan Guideline
- fruit of Syro Malabar Assembly-
Sangamam, Thuckalay - 02.10.2017



KKSSS - Health and Well Being Project Launch
21.10.2017

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No :11 November 2017

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம் | 04 |
| உயர்பேராயரிடமிருந்து.. | 07 |
| சிறுமலர் | 11 |
| இளையோர் இயக்கம் | 12 |
| வின்சென்ட் தே பவுல் | 13 |
| சமூக சேவை சங்கம் | 17 |
| இல்வாழ்வு இயக்கம் | 22 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 23 |
| Feast and B'day | 23 |
| பொன்விழாவில் | 24 |
| செங்கோட்டைச் செய்திகள் | 25 |
| மறைமாவட்டச் செய்திகள் | 27 |
| மறைவட்டச் செய்திகள் | 29 |
| Bishop's Engagements | 32 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/75/2017

31 October 2017

Dears,

Greetings from Bishop's House, Thuckalay!

Through this circular, I want to bring to your notice, once again, the letter that our Major Archbishop wrote to recently regarding the beatification of Rev. Sr Rani Maria. It was read in all our parish churches recently. The significance that this event will have on the life of the Church in India will be immense as 4 November 2017 is going to be an important day in the annals of the history of Indian Church and of the Syro-Malabar Church. On that day, Rev. Sr Rani Maria will be proclaimed a blessed martyr for Christ at Indore. She was born on 29 January 1954 at Pulluvazhy, Ernakulam, Kerala as the second child of Vattalil Paily and Elizabeth. She joined the Ernakulam Province of the Franciscan Clarist Congregation on 3 June 1972.She made her final profession on 22 May 1980.

Sr Rani Maria spent the first 16 years of her ministry in the Syro-Malabar eparchies of Bijinor and Satna. The last two years of her life were spent in the diocese of Indore. It was in Indore that she was cruelly murdered on 25 February 1995. She became a martyr for Christ. When the tree of the Church took roots and grew in strength, she was watered with the blood of the martyrs. In fact, it is said that the blood of the martyrs is the seed of Christianity. The Church also proclaims those who sacrifice their lives to uphold Christian values like truth, justice, love and fellowship as martyrs. It is in this sense that the Church is going to acknowledge Rev. Sr Rani Maria as a martyr. In that sense, she is the first of the blessed martyrs of India.

Sr Rani Maria put up a strong fight against the exploitation of the poor farm labourers by the rich landowners. She was inspired in this ministry by her strong faith in the Lord and by her valiant determination to stand up against the cruel and oppressive system that was prevalent in those areas and which trampled upon on the rights of the poor.

One of the most shining events in this saga of Christian witness was the forgiveness that the parents

and the sister of Rev. Sr Rani Maria extended to the murderer in spite of the unspeakable grief that had to bear in their hearts on account of the irreparable loss of their daughter or sister. They followed the footsteps of Gladis Stains who offered forgiveness to the criminals who burned alive her missionary husband Graham Stains and their two children. Their forgiveness will remain shining examples of heroic love, which will inspire many to practise it in their lives as well.

The history of the Catholic Church in India is blessed with heroic lives of saints, blessed ones and servants of God. Rev. Sr Rani Maria is the most recent flower that has blossomed in the spiritual garden of the Christian Church. She is one of those who fought against the forces of injustice and oppression through the sacrifice of their lives in the history of the Church: "No one has greater love than this, to lay down one's life for one's friends" (Jn15:13).She is a religious, who practised in her life the love that Jesus proclaimed in a very heroic manner through the sacrifice of his life on the Cross. Her life, work and death are sources of strength to those missionaries who preach the Gospel in very hostile environments. We shall together thank the Lord for this new source of inspiration and encouragement given to the Church in India.

As our Major Archbishop reminded us the celebration in Kerala will be held on 11 November 2017 at the Cathedral Basilica in Ernakulam. The celebration at the home parish of St Thomas Church will take place on 19 November 2017. These celebrations should inspire our young people to take a benign stand against oppressive systems, to work for the liberation of the poor and to uphold of Christian values. We shall pray for the speedy proclamation of the canonization of Rev. Sr Rani Maria. Let us implore her intercession as we carry out our various ministries.

As we conclude the month of October, a month during which we honoured our Blessed Mother through the recitation of the Holy Rosary, let us ask her to intercede for all the intentions of our Eparchy. With the extension of the territory of our Eparchy, let us now redouble our efforts at building up the kingdom of God with greater commitment and fervour.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,



+George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Circular letter No/GR/04/2017

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

## உலக படுக்கை நோயாளிகள் தினம்

இறை இயேசுவில் அன்பிற்குரியோர்களே,

இன்றைய வாழ்க்கை சூழ்நிலையில் கேன்சர் இரத்த அழுத்தம், வாதம் மற்றும் சக்கரை நோய் என பல்வேறு வகையான நோய்களால் பாதிக்கப்பட்டு படுக்கை நோயாளிகளாக தனிமை, ஏழ்மை, சரியான மருத்துவ வசதியின்மை போன்ற காரணங்களால் பராமரிப்பு இல்லாமலும், சரியான அரவணைப்பு கிடைக்காமலும் பலர் தினமும் மரணத்தை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை குறித்து அறிந்து கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக ஐ.நா சபை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 14 தேதி உலக படுக்கை நோயாளிகள் தினமாக கொணடாடி வருகிறது.

"உங்கள் விண்ணக தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்." எனும் இறைவார்த்தைக்கேற்ப தக்கலை மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் கன்னியாகுமரி சமுக சேவை சங்கம் படுக்கையிலிருக்கும் நோயாளிகளின் நோயின் வீரியத்தை குறைப்பதற்கும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காகவும் 30.10.2016 அன்று அன்னை தெரேசா நோய் தணிப்பு மற்றும் பாதுகாப்பு நிவாரண அலகைத் துவங்கியது. இந்த அமைப்பானது பல்வேறு நல்உள்ளம் படைத்த உதவும் மனப்பான்மை கொண்ட மக்களின் நிதி உதவியால் 200 க்கு மேற்பட்ட நோயாளிகளை கண்டெடுத்து அவர்களது வீட்டிற்கே சென்று நோய் தணிப்பு மருத்துவ சேவைகள் வழங்குகிறது. இதில் பெரும்பான்மையானோர் கவனிப்பதற்கு ஆட்கள் இல்லாமலும், உதாசீனபடுத்தப்பட்டும், படுக்கை புண் மற்றும் பல்வேறு இன்னல்களால் அவதியுற்று மிகுந்த மனவேதனையுடன் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள்

அவர்களுக்கு அவசர ஊர்தி சேவை, மருத்துவ உதவி, தனிமை மற்றும் பயத்தினை நீக்கி, அன்பு, அரவணைப்பு, மனரீதியான ஆதரவு, ஆன்மீக வழிகாட்டல் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. இந்த சேவையானது எந்த ஜாதி மத வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சேவை காலத்தின் மணிமகுடம் என பெருமிதத்துடன் மக்கள் பலராலும் பாராட்டப்படுகின்றது. தங்களுடைய அலுவலின் மத்தியிலும் அன்னை தெரேசா நோய் தணிப்பு மறறும் பாதுகாப்பு நிவாரண அலகில் தன்னார்வ தொண்டர்களாக பணிபுரியும் அனைத்து நல்லுள்ளங்களையும் நினைத்து பெருமிதம் கொள்கிறேன். உதவி திட்டங்களும், தன்னார்வ தொண்டர்களின் சேவையும் மேலும் அதிகமாக கிடைத்தால் இந்த சேவையானது தேவைப் படுகின்ற அனைத்து மக்களையும் சென்றடைய உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த ஆண்டின் படுக்கை நோயாளிகளின் தினத்தை தக்கலை மறைமாவட்டம் இரக்கத்தின் நாளாக அக்டோபர் மாதம் 15ம் தேதி கொண்டாடுகிறது. அதற்காக பங்குகளிலுள்ள அனைத்து குடும்பங்களும் உங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது நோயளிகளுக்கு தேவையான பொருட்களாகவோ பங்குத் தந்தையிடம் இந்நாட்களில் வழங்குமாறு கேட்டு கொள்கிறேன். இதில் பங்கு பிரதிநிதி மன்றம், மறைக்கல்வி மாணவர்கள், இளைஞர்கள் இயக்கம் மற்றும் அனைத்து பக்த இயக்கங்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டு கொள்கின்றேன். "ஒவ்வொருவருடைய வாழ்வு கடினமானதாக இருக்கலாம் ஆனால் இறப்பு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படும் இந்த அலகின் நோக்கம் வெற்றியடைய நீங்களும் இணைந்து உதவுங்கள். "உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடுகளை விட சிறந்தவை" என்னும் புனித அன்னை தெரேசாவின் பொன்மொழிகள் நமது மனதில் நீங்காத ரீங்காரமாக மாறி புனித அன்னை தெரேசா நோய் தணிப்பு, பாதுகாப்பு மற்றும் நிவாரண அலகு வழியாக நிறைவேறட்டும்!.

**இம்மாத மறைமாவட்ட நிகழ்வுகள்:**

* அக்டோபர் 15, 2017, பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளையிலிருந்து காட்டாதுறை வரை நடைபெறும் மிஷன் லீக் பவனியில் அனைத்து உறுப்பினர்களும் அவர்களோடு இணைந்து இறைமக்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

* அக்டோபர் மாதம்

என்பது செபமாலை அன்னையின் வணக்கம் மாதம் என்பது நாம் யாவரும் அறிந்ததே. நமது பங்குகளில் 22 ஆம் தியதி நடைபெறும் சங்கிலி தொடர் செபமாலையில் அனைத்து உறவியங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுகொள்கின்றேன்.

*இம்மாதம் 29ம் தியதி நமது மறைமாவட்டத்தின் மரியாவின் சேனை அமைப்பின் தலைமையில் அதங்கோடு முதல் படந்தாலுமூடு வரை நடைபெறும் செபமாலைப் பவனியில் அனைவரும் பங்கேற்று அன்னையின் அருளை பெற்று செல்ல அன்பாய் அழைக்கிறேன்.

*நமது மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான தியானம் இம்மாதம் 15ம் தியதி மாலை முதல் 20 ம் தியதி வரை தக்கலை சங்கமத்தில் நடைபெறும். இத்தியானம் சிறப்பான முறையில் நடைபெற உங்கள் செப உதவியை நாடுகிறேன்.

*அகில உலக திருச்சபை அக்டோபர் 22ஆம் தியதியை மறைபரப்பு ஞாயிறாக கொண்டாடுகிறது. அன்றைய தினத்தின் காணிக்கையானது மறைபரப்பு பணிக்காக திருச்சபையின் தலைமை இடமான உரோமைக்கு அனுப்ப படுகின்றது. எனவே இறைமக்கள் அனைவரும் திருச்சபையின் மறைபரப்பு பணியில் தங்களையும் ஈடுபடுத்தி கொள்ளும் வகையில் அன்றைய நாளின் காணிக்கையை தாராளமனதுடன் கொடுத்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுகொள்கிறேன்.

*நவம்பர் மாதம் 11ம் தியதியன்று நமது மறைமாவட்டத்தின் 21 ஆம் மறைமாவட்ட தினவிழா கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் நடைபெற உள்ளது. இறைமக்கள் யாவரும் நமது மகிழ்ச்சியை வெளிப் படுத்துகின்ற இக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்பாய் அழைக்கின்றேன்.

மறைமாவட்டம் மேற்கொள்கின்ற அனைத்து முயற்சிகளிலும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்ற உங்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கிறேன். தொடர்ந்தும் மறைமாவட்டத்தின் வளர்ச்சியில் உங்களை ஈடுபடுத்திட வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக !!!!

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.



+மார் ஜார்ஜ் இராஜேந்திரன்
தக்கலை மறைமாவட்ட ஆயர்

# உயர்பேராயர் சுற்றுமடல்

Prot. No. 1701/2017

## முத்திப்பேறுபெற்ற மறைசாட்சி அருட்சகோதரி இராணிமரியா

2017 நவம்பர் மாதம் 4ஆம் தேதி சீரோ மலபார் திருச்சபை பெருமையுடன் மனமகிழ்ந்து கொண்டாடும் ஒரு நாள். அன்று அருட்சகோதரிஇராணிமரியா F.C.C. அவர்கள் 'முத்திப்பேறுபெற்ற மறைசாட்சியாக' அறிவிக்கப்பட உள்ளார். இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையும் கேரள கத்தோலிக்க ஆயர் பேரவையும் இந்நாளின் முக்கியத்துவத்தை விளக்கி பல சுற்று மடல்களை வெளியிட்டுள்ளன. அருட்சகோதரி இராணிமரியா சீரோமலபார் திருச்சபையின் உறுப்பினரும் எர்ணாகுளம் - அங்கமாலி உயர் மறைமாவட்டத்தை சார்ந்தவருமாக இருப்பதால் அவர்களின் வீரவாழ்க்கையை எடுத்துரைத்து அவரை கௌரவிக்கும் விதமாக ஒரு தனி சுற்றுமடல் வெளியிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அருட்சகோதரி இராணிமரியாவின் வாழ்வை பல வேளைகளில் பல இடங்களில் கேட்டிருக்கிறோம். புத்தகங்கள் மற்றும் துண்டு பிரச்சாரங்கள் அவரது வாழ்க்கையின் சாராம்சத்தை வெளிப்படுத்தும் விதமாக வெளிவந்துள்ளன. திருச்சபை மக்களாகிய உங்களிடம் அவரது வாழ்க்கை முறையையும் திருத்தொண்டுப் பணியையும் குறித்த ஆழ்ந்த அறிவு இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

அருட்சகோதரி இராணிமரியா அவர்கள், 1954 ஜனவரி 29 அன்று வட்டாலில் குடும்பத்தில் பைலி மற்றும் எலிசபெத் தம்பதியரின் இரண்டாவது மகளாக புல்லுவழி என்னுமிடத்தில் பிறந்தார். அவர் 1972 ஜீன் 3ஆம் தேதி அன்று கிளாரா துறவற சபையின் எர்ணாகுளம் மாகாணத்தின் ஒரு உறுப்பினராக சேர்ந்து 1980ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதி அன்று நித்திய வார்த்தைப்பாடு செய்து இறைப்பணிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

அருட்சகோதரி அவர்கள் தனது பணியின் முதல் பதினாறு ஆண்டுகளை சீரோ மலபார் திருச்சபையின் பிஜ்னோர் மற்றும் சத்னா மறைமாவட்டங்களில் பணியாற்றினார். தனது வாழ்வின் இறுதி இரண்டு ஆண்டுகளை இன்டோர் மறைமாவட்டத்தில் பணியாற்றினார். இங்கு அவர் கொடூரமான முறையில் 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி 25ஆம் தேதி அன்று கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்பட்ட ஒருவரால் கொலை செய்யப்பட்டார்.

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராக செயல்படுபவர்கள், அவ்விசுவாசத்தை அழிக்கை யிடுபவர்களுக்கு எதிராக வழக்க மாக தாக்குதல் நடத்தவோ அல்லது

அவர்களை கொலைசெய்யவோ முற்படுவார்கள். தாங்கள் பெற்ற விசுவாசத்தை பேணிக் காக்கும் முயற்சியில் கொலை செய்யப்பட்டவர்களை திருச்சபைத் தாய் 'மறைசாட்சிகள்' என அறிவிக்கிறாள். திருச்சபையாகும் மரம் மறைசாட்சிகளின் குருதியுடன் தன் வேர்களை பூமியில் பரப்பி பலம்பெற்று செழித்து வளர்ந்தது. திருச்சபை எப்போதும் கிறிஸ்தவ மதிப்பீடுகளான உண்மை, நீதி, அன்பு மற்றும் சகோதர தோழமை ஆகியவற்றை நிலைநிறுத்த தங்கள் வாழ்வையே தியாகம் செய்து உயிர்த் துறந்தவர்களை திருச்சபையின் மறைசாட்சிகளாக அறிவிக்கிறது. இவ்வாறு தனது வாழ்வை உயிர்த்தியாகம் செய்த அருட்சகோதரி இராணிமரியா அவர்களை திருச்சபை மறை சாட்சியாக அறிவித்தது. இவ்வாறு அருட்சகோதரி இராணிமரியா 'இந்தியாவின் முதல் பெண் மறைசாட்சி' என்ற பெருமையை அடைகிறார்.

அருட்சகோதரி இராணிமரியா, செல்வந்தர்களான நிலக்கிழார்களால் சுரண்டப்படும் ஏழை விவசாயிகளின் நலனுக்காக மன உறுதியுடன் துணிந்து நின்றவர். அவரில் காணப்பட்ட வலுவான இறை நம்பிக்கை மற்றும் திடமான மன உறுதி ஏழைகளின் உரிமைகளை பறிக்கும் சதி சட்டதிட்டங்களுக்கு எதிராக தலைநிமிர்ந்து நின்று செயல்பட அவருக்கு ஊக்கமளித்தது.

இறைசாட்சிய வாழ்வில் ஒளியூட்டும் ஒரு முக்கிய செயலாக இராணிமரியா குடும்பத்தில் நிகழ்ந்தது எதுவெனில், தன் மகளை கொலை செய்த கொலையாளியை மனப்பூர்வமாக மன்னித்து 'நீயும் என் மகனே' என்ற பெற்றோரும், தனது சகோதரியை இழந்த துயரத்தில் இருந்த இராணி மரியாவின் சகோதரியும் அவரை மன்னித்து கருணைக் காட்டி ஏற்றுக் கொண்டதுமே. இது அவர்களுள் இருந்த பரந்த மனப்பான்மையையும் ஆழமான இறை விசுவாசத்தையும் எடுத்தி யம்புகிறது. மனம் நெகிழும் இந்நிகழ்வு வழியாக இவர்கள் மறைப்பரப்புப் பணியாளரான கிரகாம் ஸ்டேயின்ஸ் மற்றும் அவரது இரு குழந்தைகளை கொலை செய்தவர்களை மன்னித்த அவரது மனைவி கிளாடிஸ் ஸ்டேயின்ஸ் என்பவரின் பாதச்சுவடுகளை பின்பற்றியுள்ளனர். இவர்கள் அவருக்கு காட்டிய பெருந்தன் மையும், மன்னிக்கும் மனப் பான்மையும் பலருடைய வாழ்வில் உண்மை அன்பை வெளிப்படுத்தும் நிகழ்வாக மிளிர்ந்துக் கொண் டிருக்கும்.

எனது வாழ்வில் அருட்சகோதரி இராணிமரியாவோடு தொடர்புடைய மறக்கமுடியாத நிகழ்வு ஒன்று உண்டு. அது எதுவெனில் இராணி மரியாவின் இறப்பின் பத்தாம் ஆண்டு நினைவுக் கொண்டாட்டம் உரோமையில் வைத்து நடைபெற்ற போதும், அவரது 20ஆம் ஆண்டு

நினைவு விழா இன்டோரில் வைத்து நடைபெற்றபோதும் நான் திருப்பலி நிறைவேற்றினேன் என்பதே. இவ்இரு இடங்களிலும் திருப்பலி நிறைவேற்றியது என் மனதில் நீங்கா நினைவாக உள்ளது. அருட்சகோதரி இராணி மரியாவின் பெயரில் அறக்கட்டளையைத் தொடங்கி வைத்து அதன் முதல் உறுப்பினராக அவரது கொலையாளியான சகோதரர் திரு. சமந்தர்சிங் அவரை சேர்த்துக் கொண்டதையும் நான் இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

இந்திய கத்தோலிக்க திருச் சபையானது புனிதர்கள், மறை சாட்சிகள், இறை ஊழியர்கள் ஆகியோரின் புனித வாழ்க்கையால் நிறைந்தது. அருட்சகோதரி இராணி மரியா அவர்கள் இன்றைய காலகட்டத்தில் திருச்சபையில் மலர்ந்து புனித வாழ்வு வாழ்ந்த மலர். அநீதிக்கு எதிராகப் போராடி தங்கள் வாழ்க்கையைத் துறந்தவர்களில் ஒருவராக இவர் இன்று சபையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இதை யோவான் நற்செய்தி 15ஆம் அதிகாரம் 13ஆம் வசனத்தில் இவ்வாறு காண்கிறோம்: "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை". அருட்சகோதரி இராணி மரியா தன் உயிரை சிலுவையில் தியாகம் செய்த இயேசுவின் அன்பை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தவர். அருட்சகோதரியின் வாழ்க்கை, மறைப்பணி மற்றும் இறப்பு ஆகியவை, சவால்கள் நிறைந்த இவ்வுலகில் இறைப்பணி யாற்றும் மறைத்தொண்டர்களுக்கு உரமூட்டுவதாக அமைகிறது. இறைவன் நமக்கும் நமது திருச்சபைக்கும் இதுபோன்ற ஒரு நற்கனியை அளித்தற்காக நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நன்றி கூறுவோம்.

மறைசாட்சி இராணி மரியாவை திருச்சபை "முத்திபேறுபெற்றவர்" என்னும் நிலைக்கு நவம்பர் 4, 2017 அன்று இன்டோரில் வைத்து உயர்த்துகிறது. அவரது வாழ்க்கையோடு தொடர்புடைய மக்கள், சபை உறுப்பினர்கள், குடும்பத்தினர், மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் இவ்விழாவில் கலந்துகொள்வர். இக்கொண்டாட் டத்தின் தொடர்ச்சி கேரளாவில் நவம்பர் 11, 2017 அன்று எர்ணாகுளம் கத்தீட்ரல் பேராலயத்தில் வைத்து நடைபெறும். இவ்விழாவில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் அன்போடு அழைப்பதோடு அருட்தந்தையர்கள் அதற்கான ஏற்பாடுகளை மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவரது சொந்த பங்கான புல்லுவழி புனித தோமையார் ஆலயத்தில் வைத்து நவம்பர் 19, 2017 அன்று இவ்விழாவின் கொண்டாட்டங்கள் நடைபெறும் என்பதையும் இவ்வேளையில்

அறிவிக்கின்றேன். அனைவரும் இவ்விழாவிலும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது இளையோரும் முத்திபேறுபெற்ற மறைசாட்சி இராணி மரியாவை முன்மாதிரியாகக் கொண்டு, ஏழைகளின் நல்வாழ்வை சுரண்டும் சக்திகளுக்கு எதிராக செயல்பட வேண்டும். அதற்காக இக்கொண்டாட்டங்கள் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் கருவிகளாக அமையட்டும். விரைவில் இவருக்கு புனிதர் பட்டம் கிடைக்க அனைவரும் செபிக்குமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். முத்தி பேறுப் பெற்ற மறைசாட்சி இராணி மரியாவின் பரிந்துரை வழியாக இறைவனிடம் உங்களுக்காக செபிக்கிறேன். இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

✠ மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி
சீரோ மலபார் திருச்சபையின் உயர்பேராயர்

இவ் உயர்பேராயர் சுற்றுமடல் 2017 செப்டம்பர் 28ஆம் தேதி அன்று சீரோ மலபார் திருச்சபையின் தலைமையகம் புனித தோமையார் மலை காக்கனாடுவிலிருந்து வழங்கப்பட்டது.

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய இறைமக்களே!

நமது மறைமாவட்டத்திலும் மறைசாட்சி இராணிமரியாவின் துறவற சபையான கிளாரா மடத்தை சார்ந்த அருட்சகோதரிகள் மறைப்பணி செய்து வருகின்றனர். தற்போது சீரோ மலபார் திருச்சபையும், கிளாரா துறவற சபையும், தங்களது ஒரு மகளின் 'முத்திப்பேறுபெற்றவர்' என்னும் பட்டமளிப்புவிழாவைமகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றது. இந்த மாபெரும் நிகழ்வின் மகிழ்வை வெளிப்படுத்தும் வண்ணமாக நாமும் நமது FCC அருட்சகோதரிகளோடு இணைந்து இவ்விழாவை கொண்டாட தீர்மானித்துள்ளளோம். இவ்விழா 2017 நவம்பர் 25ஆம் நாள் தெற்றியோடு தூய பவுல் ஆலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு கூட்டுத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டமுமாக நடைபெற உள்ளது. எனவே அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் இரண்டு கைக்காரர்களும் அனைத்து பக்த சங்கங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளும் கலந்துகொண்டு மறைசாட்சி இராணி மரியாவின் வழியாக இறையாசீர் பெற்றுச் செல்ல யாவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

✠மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு : இவ் உயர்பேராயர் சுற்றுமடலை 2017 அக்டோபர் 29ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நமது அனைத்து தேவாலயங்களிலும் திருப்பலிக்கிடையே வாசிக்க வேண்டும்.

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக்

## விசுவாசப் பேரணி

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் சார்பாக, அக்டோபர் 15, 2017 அன்று நம்பிக்கைப் பேரணியானது நடத்தப்பட்டது. இப்பேரணியானது, கல்லுவிளையிலிருந்து ஆரம்பமாகி காட்டாத்துறை தூய மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் நிறைவடைந்தது. பேரணியை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் செபித்து, கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணியில், பல வண்ண உடைகளில் பிள்ளைகள் கலந்து கொண்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இளைஞர் இயக்கத்தினரின் பறை முழங்க பேரணியை வழிநடத்தினர். 'ஊடகங்களின் தாக்கமும் விசுவாச வாழ்வும்' என்ற சிந்தனையில் அலங்கரிக்கப்பட்ட மிதவை வாகனங்களும், வண்ண வண்ண பலூன்களில் விசுவாச வாழ்வின் வீழ்ச்சியும், வளர்ச்சி பற்றிய வாசகங்களும், பதாகைகளும், கொடிகளும் பேரணியில் இடம்பெற்றன. மேலும் இறைவார்த்தைகளை மாணவர்கள் உரக்கக் கூறியும் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.



மறைவட்ட வாரியாக கலந்து கொண்ட இப்பேரணியில் சிறப்புப் பங்கேற்புக்காக, ஆறுகாணி, மஞ்சாலுமூடு, சூசைபுரம் மறைவட்டங்கள் முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் வென்றன. பேரணியின் முன்வரிசையில் ஆயர் அவர்களின் பங்கேற்பு நிகழ்வுக்கு மெருகூட்டியது. பேரணியை, இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்களும் துணை இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களும் ஒருங்கிணைத்தனர்.

அருட்தந்தை ஷோஜோ
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

திறன்வளர் பயிற்சி

தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்கத்தின் சார்பில் இளையோர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டுச் செல்லவும் தங்கள் திறன்களை வெளிக் கொணரவும் தலைமைத்துவ பயிற்சி மற்றும் கலைப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தப்பாட்டப் பயிற்சி அக்டோபர் 15 ஞாயிறு அன்று காலை 10 மணி முதல் கல்லுவிளை இளைஞர் இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது. பயிற்சியை நாஞ்சில் களரி கலைப்பயிற்சி மையத்தினர் நடத்தினர். தொடர்ந்து அன்று மதியம் 2 மணிக்கு கல்லுவிளை முதல் காட்டாத்துறை வரை மிஷன் லீக் சார்பில் நடைபெற்ற நம்பிக்கைப் பேரணியில் பறை அடித்து பவனியை வழிநடத்தினர். தொடர்ந்து நிறைவு விழாவிலும் இளையோர் இயக்கத்தினர் தப்பாட்டம் ஆடி சிறப்பித்தனர்.

28.10.2017 அன்று காலை 9.30 மணிமுதல் தக்கலை சங்கமத்தில் கலைப்பயிற்சியின் தொடர் வகுப்பு நடைபெற்றது. ஒளிப்பதிவு பயிற்சியை அருட்தந்தை ஜினோ தெக்கேதலக்கல் அவர்களும், நாட்டுப்புற கலைப்பியிற்சியான ஒயிலாட்ட நடனத்தை களரி கலைபயிற்சி மையத்தினரும், பேச்சுப் பயிற்சியை இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்களும் நடத்தினர்.

நவம்பர் 11 சனிக்கிழமை அன்று நடைபெறும் 21 வது மறைமாவட்ட ஆண்டுவிழா நிகழ்ச்சிக்கு இளைஞர் இயக்கம் சார்பில் 10 நிமிட நிகழ்ச்சி நடத்தவும், அன்றைய நிகழ்வுகளை தொகுத்து வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான பயிற்சி கல்லுவிளை அலுவலகத்தில் அக்டோபர் 1 மற்றும் 4 ஆகிய நாட்களில் நடைபெறும் எனவும் தீர்மானிக்கப் பட்டது.

செல்வி. பபிஷா| செயலர்.

### முத்திப்பேறு நிலையில் அருட்சகோதரி இராணி மரியா

அருட்சகோதரி இராணி மரியாவின் முத்திப்பேறு பட்டமானது, நவம்பர் 04, 2017 அன்று இன்டோரில் வைத்து நடைபெறும். நமது மறைமாவட்டம் சார்பாக ஆயர் அவர்களும், உஜ்ஜயின் குருமடத்தில் பயிலும் குருமாணவர்களும் பங்கேற்பார்கள்.

நம் மறைமாவட்டத்தில் முத்திப்பேறு பட்டத்தின் கொண்டாட்டமானது, நவம்பர் 25, 2017 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு தெற்றியோடு பங்கில் வைத்து நடைபெறும்.

VINCENT-DE-PAUL வின்செந்தியர்

# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

**மருத்துவமனை தூய்மை முகாம்**

ஒவ்வொரு ஆண்டும் தேசத் தந்தை காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2 அன்று வின்செந்தியர்கள் 'தேசத்தோடு ஒருநாள்' என்னும் சிந்தனையின் அடிப்படையில் மருத்துவமனை தூய்மைப் படுத்துவது வழக்க மாகும். அதன்படி இவ்வாண்டு



அக்டோபர் 2 அன்று அருமனை அரசு மருத்துவமனையை தூய்மைப் படுத்தினர். முகாமை குருகுல முதல்வரும் மத்திய சபை ஆன்மீக ஆலோசகருமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப் பாடம் அவர்கள் தொடங்கி வைத்தார். மத்தியசபை தலைமைப் பணியாளர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். காலை 9.30 மணிக்கு தொடங்கப்பட்ட இப்பணி மாலை 4 மணிவரை நடைபெற்றது. இந்நிகழ்வை சகோ. ஷிபுமோன் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

**குமரி வின்செந்திய கூட்டமைப்பு முப்பெரும் விழா**

குமரி மாவட்டத்துக்குட்பட்ட மார்த்தாண்டம், கோட்டார், தக்கலை மற்றும் குழித்துறை ஆகிய மறைமாவட்டத்தில் செயல்படும் மத்தியசபைகளின் கூட்டமைப்பே குமரி வின்செந்திய கூட்டமைப்பு. இதன் ஆண்டுவிழா 22.10.2017 அன்று முளகுமூடு புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெற்றது. இரு அமர்வுகளாக நடைபெற்ற இவ்விழாவின் முதல் அமர்வை தக்கலை மத்திய சபை துணைத்தலைவர் சகோ. மணிவண்ணன் அவர்கள் வரவேற்க, கருத்துரைகள் நடைபெற்றன. இரண்டாம் அமர்வான பொதுக் கூட்டம் கோட்டாறு மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சகோ. மரிய சேவியர் அவர்கள் அனைவரையும் வரவேற்க, செயலாளர் சகோ. எட்வின்சன் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து அருட் தந்தை டோமினிக், சகோ. சேவியர் ஜேம்ஸ் ராஜ், சகோ. சௌந்தராஜ், சகோ.தேவராஜ், சகோ. வின்சென்ட், சகோ. இருதயராஜன், சகோ. வர்கீஸ் ஆகியோர் வாழ்த்துரை

வழங்கினர். தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி பரிசுகள் வழங்கினார்.

### மேல்சபை பொறுப்பாளர் பார்வை

தக்கலை மத்திய சபையை பார்வையிடுவதற்காக ஆஸ்திரேலியாவின் உதவி திட்ட அலுவலர் சகோ. வின்ஸ்டன் ஜேம்ஸ், தேசிய திட்ட அலுவலர் சகோ தாமஸ் சார்லஸ் மற்றும்



தமிழக ஒருங்கிணைப்பாளர் சகோ. சந்தியாகு மாணிக்கம் ஆகியோர் 29.10.2017 அன்று வருகை தந்தனர். அதன்படி கிள்ளியூர் பங்கில் செயல்படும் கிளைச்சபைகள், கழுவன்திட்டை பெண்கள் கிளைச் சபை, பிலாங்காலை இளையோர் கிளைச்சபை மற்றும் ஓசானம் உயர்கல்வி நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்நிகழ்வில் தேசியசபை துணைத் தலைவர் சகோ. சௌந்தராஜ், வெளிநாட்டு தொடர்பு அலுவலர் சகோ. தேவராஜ், மத்தியசபை செயலர் சகோ. எட்வின்சன், திட்ட அலுவலர் சகோ. றாபி, ஆகியோர்களும் உடனிருந்தனர். தொடர்ந்து மதியம் 2 மணிக்கு மத்திய சபைக் கூடுகையும் நடைபெற்றது.

### மஞ்சாலுமூடு வட்டார சபை கூடுகை

மஞ்சாலுமூடு வட்டார சபையின் செப்டம்பர் மாத கூட்டமானது 8.10.2017 அன்று புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் மாலை 3 மணியளவில் நடைபெற்றது. 5 கிளைச்சபைத் தலைவர்களும் 4 பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அருமனை மருத்துவமனை சுத்தப்படுத்துதல் பணிக்குச் சென்ற உறுப்பினர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

### கிளைச்சபையின் ஆண்டுவிழா

பெங்கிரி புனித பெனடிக்ட் கிளைச்சபையின் ஆண்டுவிழா 24.09.2017 அன்று கொண்டாடப் பட்டது. தத்துக்குடும்ப உறுப்பி னர்கள், கிளைச்சபை சகோதரர்கள் அனைவரும் திருப்பலியில் பங்கேற்றனர். அருட்தந்தை டோஜி அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரையுமாற்றினார். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

காரோடு பங்கில் செயல்படும் கிளைச்சபைகள் சார்பில் நிறுவனர் மற்றும் பாதுகாவலர் திருநாளை முன்னிட்டு 24.09.2017 அன்று ரூ.1000 வீதம் இரு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினர். முக்கூட்டுக்கல் ஆலயத்தில் செயல்படும் கிளைச்சபைகளும் திருப்பலி நிறைவேற்றி மாணவன் ஒருவருக்கு ரூ.2000 உதவி

செய்தனர்.

### பிலாங்காலை வட்டாரசபை ஆண்டுவிழா

பிலாங்காலை வட்டாரசபை ஆண்டுவிழாவானது 08.10.2017 அன்று பிற்பகல் 2 மணிக்கு பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் வைத்து வட்டாரசபைத் தலைவர் சகோ. சகரியா தலைமையில் தொடக்க செபத்துடன் ஆரம்பமானது. பரைக்கோடு பங்குத்தந்தை அருட்தந்தை ஜோண்சிலால், மத்தியசபைச் செயலர் சகோ. எட்வின்சன், வெளிநாட்டு தொடர்பு அலுவலர் சகோ. தேவராஜ், நித்திரவிளை வட்டாரசபை முன்னாள் தலைவர் சகோ. வின்சென்ட்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆண்டு விழா தயாரிப்புக்கு ஆயத்தமாக சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் நற்கருணை ஆராதனை நடத்தினார். தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள், பிறரன்பு பணி இயேசு காட்டித்தந்த பணி, அப்பணியைச் செய்யும் அனைத்து வின்செந்தியர்களும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என வாழ்த்தினார். மத்தியசபைச் செயலர் அவர்கள் காலத்திற்கேற்ற வாறு இரத்ததானம் போன்ற புது புது முயற்சிகளை செய்து முன்னேற்றமடைய வேண்டு மென்றும், சகோ வின்சென்ட் ராஜ் அவர்கள், நற்கருணை நாதரிடம் வேண்டிக்கொண்டு பிறருக்கு உதவியளிக்க வேண்டும் என்றும் வாழ்த்துரை வழங்கினர். 11 கிளைச்சபைகளிலிருந்து மொத்தம் 47 வின்செந்தியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பாப்பிறை பண்ணுடன் விழாவானது மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது.

### திருமண உதவி

கல்லுவிளை பகுதியில் தாயை இழந்து, நோய்வாய்ப்பட்ட தந்தை பராமரித்து வரும் இளம்பெண்ணின் திருமணத்திற்கு பிலாங்காலை புனித மேரி இளையோர் கிளைச்சபையினர் ரூ5000மும், குழந்தை தெரசாள் பெண்கள் கிளைச்சபையினர் ரூ.2000மும் திருமண உதவியாக வழங்கினர்.

பிலாங்காலை ஆலயத்தில் செயல்படும் 4 கிளைச்சபையினரும் ஒன்றிணைந்து புனித வின்சென்ட் தே பவுல், அருளாளர் ஓசானம் ஆகியோர்கள் திருநாட்களை கொண்டாடினர். திருப்பலி ஒப்புக்கொடுத்ததோடு, 17.10.2017 அன்று தடிக்காரன்கோணம் மனநலம் குன்றியோர் இல்லம் சென்று ரூ.5300 உதவி வழங்கினர்.

### பொறுப்பில்...

வயலின்கரை புனித அந்தோ ணியார் ஆலயத்தில் செயல்படும் கிளைச்சபைத் தலைவர்களின் பதவி காலம் நிறைவடைந்ததால்

கிளைச்சபைத் தலைவர்களின் தேர்தல் 08.10.2017 அன்று நடைபெற்றது. ஆண்கள் கிளைச் சபையின் தலைவராக சகோ. செல்வராஜ் அவர்களும், பெண்கள் கிளைச்சபையின் தலைவராக சகோ. செல்வி அவர்களும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய தலைவர்களுக்கு தேசிய சபை சமரசக்குழு உறுப்பினர் சகோ. சௌந்தரராஜ் அவர்கள் அறிவுரைகளும் வாழ்த்துக்களும் கூறினார். இந்நிகழ்வில் மத்தியசபை ஆன்மீக ஆலோசகரும் பங்குத் தந்தையுமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் உடனிருந்தார்.

வாறுதட்டு புனித சவேரியார் ஆண்கள் கிளைச்சபைத் தலைவரின் பதவிக் காலம் நிறை வடைந்ததால் புதிய தலைவராக சகோ ரெகுகுமார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புனித குழந்தை தெரசாள் பெண்கள் கிளைச்சபையினர் சுழல்முறை கடனுதவி திட்டத்தில் ஒரு நபருக்கு ரூ5000/- கடனுதவி வழங்கினர்.

**கடனுதவி**

நித்திரவிளை ஜெயமாதா கிளைச்சபையினர் 22.10.2017 அன்று ரூ.10000/- வீதம் 9 நபருக்கு கடனுதவி வழங்கினர். லிட்டில்பிளவர் பெண்கள் கிளைச்சபையினர் ரூ.5000/- வீதம் நான்கு நபருக்கு வழங்கினர். பங்குத்தந்தை பேரருட்தந்தை சனல் அவர்கள் தலைமை தாங்கி கடனுதவி திட்டங்களை வழங்கினார்.

**மருத்துவஉதவி**

29.10.2017 அன்று நித்திரவிளை ஜெயமாதா கிளைச்சபையினர் உடல்நலம் குன்றிய நபர் ஒருவருக்கு ரூ.1000/- மருத்துவ உதவி வழங்கினர். மேலும் அந்நோயாளிக்கு பெண்கள் கிளைச்சபையினரும், பங்குத் தந்தையுமாக இணைந்து ரூ.6000/- மதிப்பிலான கட்டில் வாங்கி வழங்கினர்.

15.10.2017 அன்று கழுவன் திட்டை புனித மார்டின் டி போரஸ் கிளைச்சபையினர் புற்றுநோயாளி ஒருவருக்கு ரூ.2000/- மருத்துவ உதவி வழங்கினர்.

சகோ. ஷாஜன்| செய்தித்தொடர்பாளர்

## செபமாலை திருப்பவனி

செபமாலை மாதமாக அறியப்படும் அக்டோபர் மாதத்தின் சிறப்பு நிகழ்வாக, மரியாயின் சேனை சார்பில், மறைமாவட்ட அளவிலான செபமாலை பவனியானது அக்டோபர் 29, 2017 அன்று நடைபெற்றது. அதங்கோடு பங்கில் குருகுலமுதல்வரால் தொடங்கி வைக்கப்பட்ட இப்பவனி படந்தாலுமூடு மறைவட்ட பங்கில் ஆயர் அவர்களின் உரையோடு நிறைவடைந்தது.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## EDUCARE

ஏழை மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் EDUCARE மாணவர்களுக்குகான விடுமுறை வகுப்பு கல்லுவிளை கன்னியாகுமரி சமூக சேவை சங்க அரங்கத்தில் வைத்து செப்டம்பர் மாதம் 27 முதல் அக்டோபர் 2 வரை 6 நாள்கள் நடைபெற்றது. ஓய்வுபெற்ற ஆங்கில பேராசிரியர் திரு. சகாயதாஸ் அவர்கள் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் இலக்கண வழுவின்றி தெளிவாக பேசவும் பிழையில்லாமல் எழுதவும் இலக்கணத்தை எப்படி பயன்படுத்தவது எனவும் மாணவர்களுக்கு அனைத்து நாட்களிலும் காலையில் பயிற்சி வழங்கினார். மதியம் மாணவர்களின் ஆங்கில பேச்சு திறமையை வெளிப்படுத்துகின்ற வகையில் பேச்சு திறமை, ஆளுமை திறமை, கலந்துரையாடல், தலைமைத்துவ பண்பு ஆகிய வகுப்புக்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. சுமார் 81 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



## ஒரு நாள் பயணம்



தாய்மையோடு கூடிய அரவணைப்பு என்ற இலக்கின் நோக்கில் செயல்படும் அன்னை தெரசா படுக்கை நோயாளிகளின் மருத்துவ சேவையினை செப்டம்பர் மாதம் 28 தேதி கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எல்ம்பசேரில் அவர்கள் அன்னை தெரசா படுக்கை நோயாளின் மருத்துவ

குழுவோடு இணைந்து ஆறுகாணி மற்றும் அணமுகம் ஆகிய பகுதிகளில் பார்வையிட்டார். அணமுக கிராமத்தில் ஒரு கிலோமிட்டர் நடந்து சென்று திரு. விஜயகுமாரி (42) என்பவரை பார்வையிட்டார். இளம் வயதிலே படுக்கை நோயாளியான அக்குடும்பத்தின் நிலை எண்ணி அவருக்கு மருத்துவ உதவியும் குடும்பத்தினருக்கு பொருளாதார உதவியும் வழங்குவதாக தெரிவித்தார். இதுபோல 10 க்கும் மேற்பட்ட படுக்கை நோயாளிகளை சந்தித்து செபம் செய்தார்.



இது எங்களை போன்றோருக்கு வரபிரசாதம் என படுக்கை நோயாளிகள் நன்றியோடு அவரிடம் கூறினார்கள். பின்பு ஒருநூறாம் வயல் சென்று சுயஉதவி குழு மகளிரை சந்தித்து அவர்களோடு கலந்துரையாடினார். எவ்வாறு சுயஉதவி குழு மகளிர் செயல்பட வேண்டும் எனவும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் ஏழை குழந்தைகளின் படிப்பு இடைநிற்றலை தவிர்க்கவும், பின் தங்கிய மாணவர்களை படிப்பில் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல புதிதாக டீயுசன் சென்டர் தொடங்குவதாக கூறினார்.

## அகில உலக உணவு தினம்:

அகில உலக உணவு தினம் அக்டோபர் 16 ஆம் தேதி கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் சாலையோரங்களிலும் தெருக்களிலும் இருந்த மனநலம் பாதித்தவர்கள் மற்றும் மிகவும் வயதானவர்களுடன் கொண்டாடப் பட்டது. அன்றைய தினம் பசியால் அவதிப்படும் மக்களுக்கு ஒரு நேர உணவினை அளிப்பதற்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்க அலுவலக பணியாளர்கள், களப்பணியாளர்கள், சுயஉதவிகுழு மகளிர் மற்றும் தன்னார்வலர்கள் என ஏராளமானவர்கள் உதவி செய்தார்கள். இதற்கு தக்கலை மறைமாவட்ட அருட்தந்தை தங்கச்சன் அவர்கள் தலைமையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க திட்ட அலுவலர் திருமதி ஷீபா மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர். இதில் தக்கலை, பார்வதிபுரம் வெட்டூர்ணிமடம் வடசேரி பேருந்து நிலையம் நாகர்கோவில் பேருந்து நிலையம் சுசிந்திரம் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 45 மேற்பட்ட தெருவில் இருந்த மனநலம் பாதித்தவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

**நலமும் நல்வாழ்வும் நிகழ்ச்சியின் துவக்க விழா:**

காரிதாஸ் இந்தியா உதவியுடன் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நலமும் நல்வாழ்வும் என்ற நிகழ்ச்சியின்



துவக்க விழா கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து அக்டோபர் மாதம் 21ஆம் தேதியன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வர வேற்புரை கூறினார். தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையேற்று நிகழ்வினை துவங்கி வைத்தார். அவர் பேசுகையில் மனிதனின் மனமும் உடலும் நலமாக இருப்பது தான் முழுமையான ஆரோக்கியம் நம்முடைய சோம்பேறி தனமான வாழ்க்கை நடைமுறைகளினால் நோய்கள் அதிகரித்து விட்டது பாரம்பரியத்தை இழந்து நாம் நோய்களுக்கு அடிமையாகி விட்டோம். நோய் பற்றிய விழிப்புணர்வு இருந்தால் மட்டுமே நாம் ஆரோக்கியமாக இருக்க முடியும். நாம் நம்மையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்து தூய்மையான ஒரு பாரதத்தை உருவாக்க வேண்டும். தற்போதைய குமரி மாவட்டம் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்தாலும் நோய்களின் எண்ணிக்கையும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த நலமும் நல்வாழ்வும் நம் மாவட்டத்திற்கு மிகவும் தேவையான ஒன்று என பேசினார். இதில் சிறப்பு விருந்தினராக குமரி மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் வசந்தி கலந்து கொண்டார். இவ்விழாவில் காரித்தாஸ் இந்தியாவின் தமிழ்நாடு சோனல் இயக்குநர் டாக்டர் ஜாண் ஆரோக்கியராஜ் அரசு மருத்துவர் டாக்டர் அன்னா ஜார்ஜ் மற்றும் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரில் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் நன்றி கூறினார். இதில் அலுவலகப் பணியாளர்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

**தவக்கால காணிக்கை - படுக்கைநோயாளிகளுக்காக...**

தக்கலை மறைமாவட்டம் தவக்காலத்தில் கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூறும்

விதத்தில் அன்றாடம் செலவு செய்யும் தொகையின் ஒரு பகுதியை சேமித்து ஏழைகளுக்கு உதவி செய்து வருகின்றது. அதுபோல இந்த ஆண்டு நமது அனைத்து பங்கு தளங்களிலும் தவக்கால ஞாயிறு காணிக்கையானது உண்டியல் மூலம் சேகரித்து படுக்கையிலிருக்கும் ஏழைநோயாளிகளின் மருத்துவ தேவைக்காக கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் புனித அன்னை தெரெசா நோய் தணிப்பு பாதுகாப்பு நிவாரண அலகுக்கு வழங்கப்பட்டது.

அதன் விபரம்:

| Church Name | No.of undiyal | Amount |
|---|---|---|
| Malaicode | 275 | 14500 |
| Thettiyode | 60 | 9500 |
| Pallikonam | 60 | 4000 |
| Muzhucode | 190 | 8000 |
| Annikarai | 100 | 9158 |
| Thuckalay | 20 | 1112 |
| Padanthalmoodu | 150 | 27300 |
| Athencode | 50 | 2000 |
| Varuthattu | 125 | 10650 |
| Nithiravilai | 190 | 55400 |
| Karode | 110 | 9706 |
| Mathapuram | 30 | 500 |
| Killiyoor | 100 | 3500 |
| Pilankarai | 90 | 5097 |
| Soosaipuram | 260 | 34210 |
| Nagercoil | 60 | 23502 |
| Cheenivilai | 70 | 5317 |
| Netta | 100 | 8789 |
| Peenu | 20 | 2443 |
| Mukkuttukal | 220 | 5000 |
| Kaliyal | 125 | 13397 |
| Perumchilampu | 6 | 5400 |
| Paraicode | 60 | 6800 |

| | | |
|---|---|---|
| Munchirai | 125 | 3406 |
| Vayalinkarai | 180 | 25000 |
| Kattathurai | 110 | 14492 |
| Thettivilai | 50 | 3120 |
| Marrappady | 110 | 9025 |
| Manjalumoodu | 250 | 15000 |
| Mezhacode | 35 | 5430 |
| Anayadi | 20 | 3600 |
| Arukani | 70 | 5080 |
| Marthandam | 15 | 2000 |
| Kalluvilai | 15 | 2421 |
| Mankarai | 220 | 15638 |
| Thadikarakonam | 15 | 1694 |
| Pathukani | 50 | 1000 |
| Palugal | 180 | 5000 |
| Kunnuvilai | 35 | 3381 |
| Christhurajapuram | 90 | 6624 |
| Bengiri | 50 | 5000 |
| Thakkalivilai | 60 | 2000 |
| Chenamcode | 35 | 1416 |
| Kulasekharam | 10 | 2340 |
| Palappallam | 150 | 6816 |
| Anamugam | 30 | 2145 |
| Total | | 406909 |

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்|இயக்குநர்

## சங்கிலி செபமாலை

உறவியம் வாரியான சங்கிலி செபமாலையானது, மறைமாவட்டம் முழுவதும் அக்டோபர் 22, 2017 அன்று நடத்தப்பட்டது. வீடு வீடாகச் சென்று நடத்திய செபமாலை பவனி விசுவாசத்தை ஊட்டி வளர்ப்பதாக அமைந்தது.



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

## கைம்பெண்கள் சங்கமம்

கழுவன்திட்டை புனித மார்டின் டி போரஸ் ஆலயத்தைச் சார்ந்த கைம்பெண்கள் சங்கமம் 21.09.2017 அன்று கழுவன்திட்டை திருஇருதய கன்னியர் இல்லத்தில் நடைபெற்றது. செபமாலையோடு தொடங்கப்பட்ட இச்சங்கமத்தில் 14 கைம்பெண்கள் கலந்து கொண்டனர். முஞ்சிறை பங்குத்தந்தை அருட்தந்தை அஜிஷ் அவர்கள் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கி, லூக் 7:11 ல் நாயீன் நகரத்து கைம்பெண்ணின் மகனை உயிர் பெற செய்த நிகழ்வு, 1 அர 17: 8-16 வரையுள்ள விவிலிய பகுதிகளை மேற்கோள் காட்டி வகுப்பு நடத்தினார். தொடர்ந்து பங்குத்தந்தை அருட்தந்தை ஷோஜோ அவர்கள் கைம்பெண்களிடம் கலந்துரையாடி உற்சாகமூட்டி ஆசி வழங்கினார். அருட்சகோதரி மேர்சிற்றா எஸ்.எச் அவர்கள் நன்றி கூறினார்.

## இடம் மாற்றமும் நியமனங்களும்

அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள், அதங்கோடு புனித மரிய கொரேற்றி ஆலயத்தின் பங்குத் தந்தையாக அக்டோபர் 29, 2017 அன்று பொறுப்பேற்றார்.

அருட்தந்தை மாத்யு முளங்ஙாசேரி அவர்கள் அதங்கோடு பங்கிலிருந்து விடுவிக்கப்பட்டு, கோழிப்போர்விளை சிக்கார் மையத்தின் முழுநேர இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு அவர், பெருஞ்சிலம்பு புனித தோமையார் ஆலயத்தின் பொறுப்பையும் வகிப்பார். அவர், அக்டோபர் 29, 2017 அன்று அப்பொறுப்பை ஏற்றார்.

அருட்தந்தை ஜோன்சிலால் அறக்கப்பறம்பில் அவர்கள் பெருஞ்சிலம்பு ஆலயத்தின் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

## காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையக்கூடுதல் கட்டிடம் மந்திரிப்பு

காரோடு தேவசகாயம் பிள்ளை நல்வாழ்வு நிலையத்திற்கு கூடுதல் கட்டிடமானது எழுப்பப்பட்டுள்ளது. இது கூடுதல் நபர்களுக்கு சேவை செய்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். இதனுடைய மந்திரிப்பானது, நவம்பர் 30, 2017 அன்று நடைபெற இருக்கிறது. இதற்காக அயராது உழைத்தவர் அருட்தந்தை வினோத் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருட்சகோதரர்களிடமிருந்து...




களப்பணியாற்றும் அருட்சகோதரர்களுக்கான ஒருநாள் தியானம் சங்கமத்தில் 31.10.2017 அன்று நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தியான உரையாற்றினார். ஆயர் அவர்களும் அருட்சகோதரர்களை சந்தித்துப் பேசினார்.

மஞ்சாலுமூடு சிறுமலர் மறைவட்ட ஆலயத்தில் களப்பணியாற்றும் அருட்சகோதரர் ஜோஸ் அவர்கள் நவம்பர் 1 முதல் சங்கமத்தில் களப்பணியை தொடர உள்ளார். கல்லுவிளையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தில் களப்பணியாற்றும் அருட்சகோதரர் மகேஷ் அவர்களின் களப்பணி டிசம்பர் மாதம் வரை நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

குருத்துவக் கல்வியை நிறைவு செய்துள்ள திருத்தொண்டர் ஜெபனேஷ் அவர்கள் மறைமாவட்டத்திற்கு நவம்பர் 6 அன்று வருகை தர உள்ளார். திருத்தொண்டர் சுபின் அவர்கள் பேரருட்தந்தை டென்சி அவர்களின் உதவியாளராக பணியாற்றி வருகிறார்.

பெங்களூரில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் அஜூ மற்றும் ஜார்ஜ் முதலாம் பருவத் தேர்வு விடுமுறையில் திருத்தொண்டுப்பணி அனுபவத்திற்காக மிஷன் மறைமாவட்டங்களை சந்திக்கச் சென்றனர். அதன் படி அருட்சகோ அஜூ தலைமையில் 6 அருட்சகோதரர்கள் தக்கலை மறைமாவட்டத்திற்கு வருகை தந்தனர். 3 அருட்சகோதரர்கள் கல்லுவிளை சமூக சேவை சங்கத்திலும், மற்ற 3 அருட்சகோதரர்கள் முஞ்சிறை, கிள்ளியூர், தெற்றியோடு ஆகிய பகுதிகளிலும் களப்பணியாற்றினர்.

மூன்றாமாண்டு தத்துவவியல் பயிலும் அருட்சகோதரர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரை தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

அருட்சகோதரர் டோஜி
தலைவர்

| NOVEMBER | BIRTHDAY OF REV. FATHERS |
|---|---|
| 17 | Rev. Fr. JOSEPH OTTALANKAL MST |
| 20 | Rev. Fr. JOHN THEKKEL |
| **NOVEMBER** | **FEAST DAY OF REV. FATHERS** |
| 26 | Rev. Fr. CHRISTUDAS M. |

## கன்னியாகுமரி புனித மரியன்னை ஆலயத்தில் பொன்விழா கொண்டாட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1967 - ஜனவரி மாதத்தில் ஆரம்பிக் கப்பட்ட மிஷன் சேவைகளின் 50 வருடங்கள் நிறைவடைந்ததை ஒட்டி 2016 செப்டம்பர் மாதம் ஆலயத் திருவிழாவின் போது பொன்விழா ஆண்டு துவக்க விழாவும் துவங்கிவைக்கப்பட்டது.



தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் குத்து விளக்கை ஏற்றி வைத்து ஜுபிலி கொண்டாட் டத்தை தொடங்கி வைத்தார். இவ்வாண்டில் சிறப்பு செபங்களும், ஆராதனைகளும் பல வழிபாடு களும் ஏறெடுக்கப்பட்டன.

இந்த ஜுபிலி ஆண்டில் ஆலயம் விரிவுபடுத்துதல் மற்றும் புதுப்பித்தல் அவசியம் என்று அறிந்து அதற்கான பணிகள் டிசம்பர் 2016-ல் மிதமான வருமான வசதிகளுடன் தொடங்கப்பட்டது. இறைவனின் ஆசீராலும், அனைத்து நல்லுள்ளங்களின் ஒத்துழைப்பாலும் பத்து மாதங் களில் இவ்வேலைகள் முடிவடைந் தன. புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தின் அர்ச்சிப்பு விழா மற்றும் இறைப்பணிக்காக சமர்ப்பித்தல் நிகழ்ச்சி அக்டோபர் 8 அன்று தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் மற்றும் பேரருட்-தந்தை ஸோணி பாலாத்தறா CMI, (Vicar Provincial), பேரருட்-தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் (Vicar General) ஆகியோர்களால் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச் சியில் ஏராளமான பொதுமக்கள், பங்கு மக்கள், அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் பங்கேற்றனர்.

இந்த வாரத்தின் ஒருநாள் ஞானஸ்நான தினமாக ஒதுக்க-ப்பட்டது. அத்தினத்தில் பத்து குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் வழங்கப்பட்டு அவர்கள் புதிய அங்கங்களாக பங்கில் சேர்க்கப் பட்டனர். மற்றொரு நாள் சாவறா தினமாக அனுசரிக்கப்பட்டு சிறப்பு நவநாள் செபமும் ஏறெடுக்கப்பட்டது. இத்தினத்தில் பத்தொன்பது பிள்ளைகள் புது நன்மை பெற்றுக் கொண்டனர். மேலும் மறைக்கல்வி மற்றும் இளைஞர் இயக்க ஆண்டு விழாவில் கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் மிகசிறப்பானதாகவும்

மனதிற்கு மகிழ்ச்சியூட்டு பவையாகவும் இருந்தன.

இப்பொன்விழா ஆண்டின் ஜுபிலி கொண்டாட்ட விழாவானது அக்டோபர் 15, 2017 அன்று நடத்தப்பட்டது. அருட்தந்தை செபாஸ்டின் சாமத்தறா CMI (Provincial), Provincial Councillors, மற்றும் முன்னாள் பங்குத்தந்தையர்கள் ஆகியோர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மாலை 6 மணியளவில் St. Mary's



Central School வளாகத்தில் வைத்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. விழாவினை தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் தொடங்கி வைக்க, குழித்துறை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜெரோம்தாஸ் வறுவேல் SDB அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். அருட்தந்தை செபாஸ்டின் சாமத்தறா CMI அவர்கள் தலைமையுரையாற்றினார். அருட்தந்தை சஜு சக்காலக்கல் CMI, பேரருட்தந்தை ஆன்றனி இளந்தோட்டம் CMI, பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம், பேரருட்தந்தை சண்ணி மேத்யூ, அருட்சகோதரி. விஜி CMC, அருட்தந்தை மேத்யூ அந்தியாங்குளம் CMI, ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பங்குத் தந்தை அருட்திரு டினு கோட்டய்க்க பறம்பில் CMI அவர்கள், அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மேலும் இப்பங்கில் சேவை புரிந்த முன்னாள் பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டு ஆதரிக்கப் பட்டார்கள். இத்தினம், பொன்விழா மலர் ஒன்று தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்களால் வெளியிடப்பட்டது. இறுதியாக திரு. T. அகஸ்டின் (Jubilee Committee Convenor) அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். நமது பங்கின் ஆன்மீக பயணத்தின் வெற்றிகரமான இம்முன்னேற்றக் கொண்டாட்டத்தில் ஆயிரகணக்கான பொது மக்கள், விசுவாசிகள் மற்றும் பலர் பங்கேற்றனர்.

அருட்தந்தை டினு கோட்டக்கப்பறம்பில் **CMI**
மேலாளர், புனித மரியன்னை இல்லம், கனியல்

## செங்கோட்டைச் செய்திகள்

**மறைபரப்புப் பணியாளர்கள் சந்திப்பு**

செங்கோட்டை மறைபரப்புத் தளங்களில் பணியாற்றும் உறுப்பினர்களின் கூடுகையானது செப்டம்பர் 23ஆம் நாள் மேக்கரை திருச்சிலுவை அருட்சகோதரிகள் இல்லத்தில் நடைபெற்றது. இதில் 7 அருட்தந்தையர்களும் 15 அருட்சகோதரிகளும் பங்கெடுத்தனர். அருட்தந்தை செபி அவர்கள் திருப்பலியைக் குறித்த வகுப்பை வழிநடத்தினார். ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளங்கள் வழங்கப்பட்டது. மேலும் மிஷன் லீக் பவனி மற்றும் மறைபரப்பு செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. நிறைவில் பெயர்கொண்ட திருநாளை கொண்டாடும் அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்களுக்கு வாழ்த்துக்கள் கூறினர். அன்பின் விருந்தும் நடைபெற்றது.

**ஆலயத் திருவிழா**

புளியரை ஆலயத் திருவிழா 27.09.2017 முதல் 1.10.2017 வரை 5 நாட்கள் இனிதே நடைபெற்றது. முதல் இருநாட்கள் தியானத்தை அருட்தந்தை ஜாண் அவர்கள் வழிநடத்தினார். நிறைவு நாளன்று செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் அனைத்து பங்குகளிலிருந்தும் இறைமக்கள் கலந்து கொண்டனர். நிறைவு நாள் திருப்பலியை அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் வழிநடத்தினார்.


**ஆயர் சந்திப்பு**

செங்கோட்டை மறைபரப்புத் தளங்களில் பணியாற்றும் அருட்பணியாளர் மற்றும் இறைமக்களுக்காக ஒருநாள் தியானம் 14.10.2017 அன்று வாஞ்சி ஆலயத்தில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் பங்கேற்று திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றினார். மதியம் 2.45 மணிக்கு அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கூடுகை நடைபெற்றது. இக்கூட்டத்திலும் ஆயர் அவர்கள் பங்கேற்று அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்போடு செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### ஆயருடன் அருட்தந்தையர்களின் புனித பயணம்

மறைமாவட்டத் சார்ந்த குருக்கள் ஆயருடன் இணைந்து புனித பயணமாக எர்ணாகுளத்திற்கு அக்டோபர் 25, 2017 அன்று சென்றார்கள். அன்றைய தினம் முன்னாள் ஆயரும், இந்நாள் சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயருமான ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்களை சந்திக்கவும் கலந்துரையாடவும் வாய்ப்பு அமைந்தது.

மறைமாவட்டச் செய்திகள்



# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

## அருட்பணிப் பேரவை

மறைமாவட்ட அருட்பணிப் பேரவை கூட்டமானது தக்கலை சங்கமத்தில் வைத்து அக்டோபர் 2, 2017 அன்று நடைபெற்றது. இளைய தலைமுறைக்கு உயர் கல்வி வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் குறித்த விவாதமானது மேற்கொள்ளப்பட்டது. மறைமாவட்ட கல்விப் பணிக்குழு, அன்றைய தினம் சிறப்பு கருத்துரையாளர்களை அழைத்திருந்தது. அன்றைய தினம், சமீபத்தில் முடிவடைந்த சீறோ மலபார் பொதுக் கூட்டத்தின் தீர்மானங்களின், மறைமாவட்டத்திற்கான செயல்வடிவம் அடங்கிய நூலானது வெளியிடப்பட்டது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நூலை வெளியிட பிரான்சிஸ்கன் கிளாரா சபைத் மாகாணத் தலைவி அருட்சகோதரி சீலியா எப். சிசி அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்கள்.

## குருக்களுக்கான வருடாந்தர தியானம்

குருக்களுக்கான வருடாந்தர தியானமானது இவ்வாண்டு, தக்கலை சங்கமத்தில் வைத்து, அக்டோபர் 16 முதல் 19 ஆம் தேதி வரை நடைபெற்றது. தலச்சேரி உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக பதவி ஏற்க இருக்கும் அருட்தந்தை ஜோசப் பாம்பிளானி அவர்கள் தியானத்தை வழிநடத்தினார்.

## தக்காளிவிளை திருக்குடும்ப பங்கிற்கு புத்தாலயம்

தக்காளிவிளையில் புதிதாக எழுப்பப்பட்ட ஆலயத்தின் அர்ச்சிப்பானது, அக்டோபர் 21, 2017 அன்று நடைபெற்றது. திருவழிபாட்டை தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நிறைவேற்றினார். குறுகிய காலத்தில் ஆலயப்பணிகளை பங்கு மக்களோடு இணைந்து முடித்த அருட்தந்தை லின்ஸ்லால் மங்கலத் அவர்களை ஆயர் பாராட்டினார்.

## மறைமாவட்ட தினம் மற்றும் சீரோ மலபார் சபை உயர் பேராயமாக உயர்த்தப்பட்டதன் வெள்ளிவிழா கொண்டாட்டம்

தக்கலை மறைமாவட்டம் உருவாக்கப்பட்டதன் 21 ஆம் ஆண்டின் நிறைவையும், சீரோ மலபார்த் திருச்சபை உயர் பேராயமாக உயர்த்தப்பட்டதன் வெள்ளி விழாவையும் மிகவும் விமரிசையாக மறைமாவட்டம் சார்வில் நவம்பர் 11 அன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினராக, சங்ஙணாசேரி உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மார் தாமஸ் தறயில் அவர்கள் பங்கேற்கிறார்கள். அன்றைய தின நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி, 11.00 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் முடிவு பெறும். மதியம் 1.00 மணிக்கு அனைத்து நிகழ்வுகளும் முடிவுக்கு வரும். பொதுக்கூட்டத்தில் திருத்தொண்டுப் பணியில் சிறப்பாக செயல்பட்டோருக்கு சேவை செம்மல் விருது வழங்கி கவுரவிக்கப்படும்.

## தக்கலை மறைமாவட்டத்தின் எல்லை விரிவாக்கம்

தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையை விரிவாக்கும் அதிகாரபூர்வமான ஆணையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அக்டோபர் 09, 2017 அன்று வெளியிட்டார். இவ்வாணைப்படி, தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையானது, கன்னியாகுமரி, மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய தமிழக மாவட்டங்களைக் கொண்டதாக இருக்கும். விரிவாக்கப்பட்ட எல்லைக்காக நன்றி செலுத்துவதோடு, திருத்தொண்டுப் பணியை விரிவுபடுத்த வேண்டிய அருளுக்காக இறைவனிடம் செபிப்போம்.

| வரவிருக்கும் நிகழ்வுகள் | |
|---|---|
| நவம்பர் 04 | அருட்சகோதரி இராணி மரியாவின் முத்திப்பேறு பட்டம் |
| நவம்பர் 04 | காரோடு, DNN கூடுதல் கட்டிடம் மந்திரித்தல். |
| நவம்பர் 11 | மறைமாவட்ட தினம் |
| நவம்பர் 14 | அருட்தந்தையர்கள் கூட்டம் |
| நவம்பர் 25 | அருட்சகோதரி முத்திப்பேறு பட்டம் பெற்றதற்கான மறைமாவட்ட கொண்டாட்டம் |

# மறைவட்ட செய்திகள்




## மஞ்சாலுமூடு மறைவட்டம்

**செபமாலை**

பெள்கிரி புனித பெனடிக்ட் ஆலயத்தில் 22.10.2017 முதல் 31.10.2017 வரை 10 நாட்கள் சிறப்பாக செபமாலை நடைபெற்றது. 31.10.2017 அன்று அன்னையின் செபமாலைத் திருப்பவனியும் நடைபெற்றது.

**மிஷன் ஞாயிறு**

மிஷன் ஞாயிறை கொண்டாடும் விதமாக மறைக்கல்வி மாணவர்கள் அனைத்து இல்லங்களுக்கும் சென்று பொருளுதவி வாங்கி ஏலமிட்டு அப்பணத்தை மிஷன் வளர்ச்சிக்காக கொடுத்தனர்.

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் செபமாலை அன்னையின் திருவிழா அக்டோபர் மாதம் 21 முதல் 31 வரை கொண்டாடப்பட்டது. அனுதினமும் செபமாலை செபிக்கப்பட்டு நிறைவு நாளன்று திருப்பவனியுடன் நிறைவுபெற்றது. குருசடி புதுப்பிக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. செபமாலை கொண்டாட்டத்தை நிறைவு செய்யும் வண்ணமாக ஆலயத்திற்கு வரஇயலாமல் இருக்கும் இல்லங்களில் இருக்கும் நோயாளிகளுக்கு இல்லங்களில் சென்று நற்கருணை வழங்கப்பட்டது.

**ஜுபிலி**

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் ஜுபிலி ஆண்டை முன்னிட்டு ஆலயம் புதுப்பிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 8.10.2017 அன்று திருப்பலிக்குப்பின் அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது இப்பணிக்காக அனுதினமும் சிறப்பு செபமும் நடைபெற்று வருகிறது.

செபமாலை மாதத்தை முன்னிட்டு முழுக்கோடு ஆலயத்தில் 20.10.2017 முதல் 28.10.2017 வரை செபமாலை மாதம் சிறப்பிக்கப்பட்டது. 28.10.2017 அன்று இரவு ஆலயத்திலிருந்து தொடங்கப்பட்ட செபமாலை திருப்பவனி அருட்சகோதரிகள் இல்லத்தில் நிறைவுபெற்றது. பின்னர் அருட்தந்தை மிஜோ அவர்கள் அன்னையின் சிறப்பை விளக்கி செய்தி வழங்கினார்.

## படந்தாலுமூடு வட்டாரம்

**மிஷன் ஞாயிறு**

தெற்றியோடு தூய பவுல் ஆலயத்தில் மிஷன் ஞாயிறு 22.10.2017 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய ஞாயிறு திருப்பலி மாலை 6 மணிக்கு நடைபெற்றது. காலையில் மிஷன் லீக் மாணவர்கள் ஒவ்வொரு இல்லங்களுக்கும்

சென்று பொருள்கள் பெற்று திருப்பலிக்குப்பின்னர் ஏலமிடப்பட்டது. பங்கு மக்கள் அனைவரும் இல்லங்களிலிருந்து உணவுப் பொட்டலங்கள் கொண்டு வந்து ஏலமிட்டு வாங்கி உண்டனர். இளைஞர் இயக்கத்தினர் உணவுப் பொருட்களை விற்பனை செய்தனர். இதன் வழியாக கிடைக்கப்பட்ட தொகை மிஷன் வளர்ச்சிக்காக பங்குத்தந்தையிடம் வழங்கினர்.

### பிரியா விடை

அதங்கோடு பங்கின் பங்குத் தந்தையாக இரண்டரை ஆண்டுகள் பணியாற்றிய அருட்தந்தை மேத்யூ முளங்காசேரில் MST அவர்கள் இடமாறுதல் பெற்றார். எனவே தந்தை அவர்களுக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு 22.09.2017 அன்று திருப்பலிக்குப் பின்னர் நடைபெற்றது. தந்தை அவர்கள் பங்கில் ஆற்றிய பணிகளின் வீடியோ தொகுப்பு காணொளியாக காண்பிக்கப்பட்டது. பிரியாவிடை பாடல் மற்றும் தந்தை அவர்களோடு பணியாற்றிய அனுபவங்களையும் பங்குமக்கள் பகிர்ந்தனர். தந்தை அவர்கள் ஏற்புரையாக தன்னோடு பங்கின் வளர்ச்சிக்காக பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பங்குமக்கள் சார்பில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு, தந்தை அவர்கள் தங்குமிடம் வரை சென்று விடைபெற்றனர். 37 ஆண்டு கனவாக இருந்த ஆலயக்கட்டுமானப் பணியை தொடங்கி, செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பணியேற்பு

அதங்கோடு பங்கின் புதிய பங்குத் தந்தையாக அருட்தந்தை முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் 29.10.2017 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார். மறைமாவட்ட நிதியாளர் பேரருட்தந்தை டென்சி





முண்டுநடக்கல் அவர்கள் தந்தை அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து புதிய பங்குத்தந்தை திருப்பலி நிறைவேற்றி ஆயர் அவர்களின் நியமன ஆணையை வாசித்து பொறுப்பேற்றார். திருப்பலிக்குப் பின் பங்குமக்கள் சார்பில் பொன்னாடை அணிவித்து, வரவேற்பு நடனமாடி வரவேற்றனர்.

செபமாலை

அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தில் செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 8 முதல் 18 வரை சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நாட்களில் புனித மரியன்னை குருசடியில் செபமாலை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

<u>சூசைபுரம் மறைவட்டச் செய்திகள்</u>

சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் மாதத்தின் முதல் ஞாயிறு தந்தையர்களுக்கான சிறப்புக் கூட்டமும், நான்காம் ஞாயிறு இளையோர்களுக்கான கூட்டமும் மூன்றாம் ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவியருக்கான தனித் திருப்பலியும், கூட்டமும் நான்காம் ஞாயிறு மகளிருக்கான தனித்திருப்பலியும் நடைபெற்று வருகிறது.

மரியாயின் சேனை மற்றும் பக்த இயக்கங்களின் சார்பில் செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 1 முதல் 31 வரை சிறப்பு செபமாலை குருசடியில் வைத்து நடைபெற்றது. இதன் நிறைவு நவம்பர் 1 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலிக்குப்பின் செபமாலைப் பவனியோடு நிறைவடையும். பவனி ஆலயத்திலிருந்து தொடங்கி கல்லறைத் தோட்ட குருசடியில் நிறைவு பெறும்.

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய திருவிழா நவம்பர் 17 முதல் 26 வரை 10 நாட்கள் நடைபெறும்.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

| சீரோ மலபார் திருச்சபையில் புதிய ஆயர்களாக நியமனம் பெற்றுள்ள தந்தையர்களின் ஆயர் அருட்பொழிவு | |
|---|---|
| நவம்பர் 8 | அருட்தந்தை ஜோசப் பாம்பிளானி,<br>தலச்சேரி உயர் மறைமாவட்ட துணை ஆயர் |
| நவம்பர் 12 | அருட்தந்தை செபாஸ்டின் வாணியப்புரைக்கல்,<br>சீரோ மலபார் திருச்சபை தலைமைச் செயலக ஆயர் |
| நவம்பர் 18 | அருட்தந்தை டோனி நீலங்காவில்<br>திருச்சூர் உயர் மறைமாவட்ட துணை ஆயர் |
| நவம்பர் 22 | அருட்தந்தை செபாஸ்டின் பொழிப்பறம்பில்<br>ஓசூர் மறைமாவட்ட ஆயர் |
| ஜனவரி 7, 2018 | ஆயர் மார் ராபேல் தட்டில்<br>ஷம்பஷாபாத் மறைமாவட்ட ஆயர் |

| BISHOP'S ENGAGEMENTS NOVEMBER 2017 | | | |
|---|---|---|---|
| DAT | DAY | TIME | EVENTS |
| 1 | Wed | 09.30am | Curia meeting \| Bishop's House: KKSS meeting |
| 2\|3 | Thu | | Indore >> Ujjain: meeting with brothers \| Indore |
| 4 | Sat | 10.00am | Indore: Beatification Qurbana of Sr. Rani Maria |
| **5** | **Sun** | | **Indore >> Trivandrum** |
| 6\|7 | Mon | | Bishop's House \| Bishop's House >>Tellicherry |
| 8 | Wed | 10.00am | Tellicherry: Episcopal Ordination >> Trivandrum |
| 9 | Thu | 05.00pm | Anayadi: SJSM Sisters' Jubilee Qurbana |
| 10 | Fri | 03.00pm | Bishop's House: Meeting with Marian Senai |
| 11 | Sat | 09.30pm | Kalluvilai: 21st Diocesan Day >> Kozhancheri |
| **12** | **Sun** | **03.00pm**<br>**01.00pm** | **Kozhanchery: Holy Qurbana**<br>**Kanjirapally: Episcopal Ordination** |
| 13 | Mon | 11.00pm | KKSSS General Body Meeting |
| 14 | Sat | 09.30am | Priests Conference \| communication dept Meeting |
| 15 | Wed | 07.00pm | Meeting with Bishop Victor |
| 16 | Thu | 07.00am<br>09.00pm | Thadikkarakonam: Baptism and Holy Qurbana<br>Bishop's House: Meeting with Adv. Justeenar Raj |
| 17 | Fri | | Bishop's House >>Trichur |
| 18 | Sat | 02.00pm | Trichur: Episcopal Ordination >>Thuckalay |
| **19** | **Sun** | **07.30am** | **Munchirai: Pastoral Visit \| Valinkarai: Inauguration of Tailoring Centre** |
| 20-22 | Mon | 05.30pm | >> To Chennai \| Chennai: Episcopal Ordination |
| 23 | Thu | | Chennai >>Thuckalay |
| 24 | Fri | 06.30pm | Saveriyarpuram: Kodiyettu and Homily |
| 25 | Sat | 09.30 am<br>02.00pm<br>06.00pm | Christurajapuam: Feast day Holy Qurbana<br>Thettiyode: Beatificat. Celebration of Rani Maria<br>Kannyakumari: Piarist Fathers' School |
| **26** | **Sun** | **09.00am** | **Palapallam: Parish Feast** |
| 27 | Mon | 03.00pm | Bishop's House: Meet. with Vincent de Paul members |
| 28 | Tue | 05.00pm | Mukkootukal: Visit to Minor Seminary |
| 29 | Wed | 05.00pm | Visit to Shenkottai Mission |
| 30 | Thu | 10.00am | Karode: DNN Blessing |

**Fr. Thomas Sathianesan** |Eparchial Chancellor



Reception to Bishop Elect Mar Tony Neelankavil ,
Auxilliary Bishop of Trichur - 03.10.2017



TCYM - Special Performance for
Mission League Rally - 15.10.2017



Consecration of New Church at Thakkalivilai
21.10.2017

## இந்தியாவின்
## முதல் பெண் இரத்தசாட்சி



SR. **இராணி மரியா** FCC

BEATIFICATION - Nov. 4, 2017 at Indore, MP

**பிறப்பு: 29.01.1954**

**திருமுழுக்கு : 25.02.1954**

**முதல் திருவிருந்து : 30.04.1966**

**துறவற முதல் வார்த்தைப்பாடு : 01.05.1974**

**நித்தியவார்த்தைப்பாடு : 22.02.1980**

**இரத்தசாட்சி : 25.02.1995**

**முத்திப்பேறு பெற்றவராக : 04. 11. 2017**

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570